**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இன்று. அன்றைக்கு நடைபெற்றது வேறு. அதைத்தான் நான் சுட்டிக்காட்டினேனே தவிர, இன்று நீங்கள் அவையின் சார்பாக, தீர்மானம் நிறைவேற்றி வெளியேற்றப்பட்டதைப்பற்றி நான் எந்தக் கருத்தும் சொல்ல விரும்பவில்லை. ஆனால், ஆளுநர் இருந்தபோது, ஆளுநர் அங்கே அமர்ந்துகொண்டு அவர் செயலாற்றியபோது, சபாநாயகராக இருக்கின்ற நீங்கள் எப்படி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் அன்றைக்குத் தீர்ப்பு அளிக்கின்றபோது, வெளியேற்ற உத்தரவிடுகின்ற நேரத்திலே தெளிவாகச் சொன்னீர்கள். ஆளுநர் அவர்களுடைய அனுமதியோடுதான் வெளியேற்றுகிறேன் என்று சொன்னீர்களே தவிர, தன்னிச்சையாகச் சொல்லவில்லை. மேலும், கர்நாடகாவிலே ஆளுநர் வெளியேறினார் என்று சொல்வது இங்கே பொருந்தாது. அதுமட்டுமல்; இந்தச் சபை கூட வேண்டுமென்று அனுமதி தருவதே ஆளுநர்தான். அவர் எதற்காக வெளியேறவேண்டும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, உங்கள் வேண்டுகோளை வைத்துவிட்டீர்கள். உட்காருங்கள். அவ்வளவுதான். No இனி அந்த subject-ஐ open பண்ணாதீர்கள்.

## 5. அறிவிப்புகள்

### (அ) மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 9-(1)ன்கீழ் கீழ்க்காணும் உறுப்பினர்களைப் பேரவையின் பதினைந்தாவது கூட்டத் தொடருக்கான மாற்றுத் தலைவர்களாக நியமிக்கின்றேன். (குறுக்கீடுகள்)

திரு. மு. அப்பாவு

திரு. நா. இராமகிருஷ்ணன்

திரு. து. அமரமூர்த்தி

டாக்டர் க. நெடுஞ்செழியன்

திருமதி ரா. லீமா றோஸ்

திரு. சு. குணசேகரன். (குறுக்கீடுகள்)

திரு. செங்கோட்டையன், நீங்கள் உங்கள் வேண்டுகோளை வைத்துவிட்டீர்கள். அத்தோடு நிறுத்திக்கொள்ளுங்கள். உட்காருங்கள்.

## 6. ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீது விவாதம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானம். ஆளுநர் பேருரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை முன்மொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்று பேசுவதற்கு வாய்ப்புக் கோரி கூச்சலிட்டனர்.)*

***திரு. குத்தாலம் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "2011 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 7 ஆம் நாளன்று சட்டப் பேரவைக்கு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த பேருரைக்கு@, தமிழ்நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் பெரிதும் நன்றியுடையவர்களாவர்" என்னும் தீர்மானத்தை முன்மொழிகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழிமொழிதல். மாண்புமிகு உறுப்பினர் திரு. இ.ஏ.பி. சிவாஜி.

**திரு. இ.ஏ.பி. சிவாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குத்தாலம் க. அன்பழகன் அவர்கள் முன்மொழிந்த மேதகு ஆளுநர் அவர்கள் உவந்தளித்த

---

@ 135 முதல் 186 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.